# ERODE CITY MUNICIPAL CORPORATION

Dated 31.1.2017 7

2017ம் ஆண்டு ஜனவரி மாதம் 31ந் தேதி செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட கூட்டம்.

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்
ஈரோடு மாநகராட்சி.

16)

1. ஈரோடு மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் தற்போது ஈரோடு மாநகராட்சி மற்றும் அதனை சுற்றியுள்ள நர்சிங் பயிற்சி பள்ளியிலிருந்து கள பயிற்சிக்காக மாணவ, மாணவியர்கள் அனுப்பப்படுகிறார்கள். இவர்களை பயிற்சிக்காக அனுமதிக்கவும் இவர்களுக்கு ஒரு மாதத்திற்கு அனுமதி கட்டணமாக ரூ.100/- வீதம் (ரூபாய் நூறு மட்டும்) நபர் ஒருவருக்கு நிர்ணயிக்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.

1) அனுமதிக்கப்பட்டது

அலுவலகக்குறிப்பு :

அனுமதி வழங்கலாம்.

(எச்1/5536/14)

17)

2. ஈரோடு மாநகராட்சியில் பராமரிக்கப்படும் கட்டடங்களின் மேற்கூரையில் சூரிய மின்சக்தி ஆலைகள் அமைத்திட சாத்திய கூறுகளை ஆய்வு செய்து, அதன் அடிப்படையில் வாய்ப்புள்ள கட்டடங்கள் மீது சூரிய மின்சக்தி ஆலைகள் மின்உற்பத்தி செய்யும் திட்டம் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

1) அனுமதிக்கப்பட்டது

இதன்படி உரிய கலந்தாலோசகரை நியமித்து ஒப்பந்த படிவம் தயாரித்திடவும் மற்றும் ஒப்பந்த செயல்முறை மேலாண்மை செய்திட வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொண்டு உரிய நிர்வாக அனுமதி பெற்று பணியினை செயல்படுத்திடவும், மேற்படி, சூரிய மின்சக்தி ஆலைகள் அமைத்து மின் உற்பத்தி செய்யும் திட்டத்திற்கு 100 விழுக்காடு முதலீடு செய்திடவும், இந்த முதலீட்டு தொகையினை, மின் உற்பத்தி மூலம் ஈட்டிட தேவைப்படும் காலம் வரை சூரிய மின்சக்தி ஆலைகளை இயக்கி பராமரித்தல் உட்பட அனைத்து தொடர்பு வேலைகளையும் செய்திடவும், முன்வரும் புதுப்பிப்பு மின் திறன் சேமிப்பு நிறுவனங்கள் / முதலீட்டாளர்கள்/ ஒப்பந்தபுள்ளி போட்டியாளர்களை வரவேற்று பணி செயலாக்கம் செய்திட ~~மன்றத்தின்~~ அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

அனுமதிக்கலாம்.

(இ1/41/17)

Dated 31.1.2017 8

18)

3. தஞ்சாவூர் மாநகராட்சியில் துப்புரவுப்பணியாளராகப் பணிபுரிந்து வந் .திரு ராமதாஸ் என்பவர் பணியிடை காலமானதால் அவரது மனைவியும், வாரிசுதாரருமாகி திருமதி கங்காதேவி என்பவர் கருணை அடிப்படையில் துப்புரவுப்பணியாளராக தஞ்சாவூ மாநகராட்சியில் பணிநியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருவதாகவும், அவரது சொந்த ஊ ஈரோடு என்பதால் தஞ்சாவூரில் யாருடைய ஆதரவுமின்றி தனியாக அங்கு வசித்து வருவதா பாதுகாப்பு இல்லை என்றும், குடும்ப சூழ்நிலையைக் கருத்தில் கொண்டும் ஈரோ மாநகராட்சியில் காலியாக உள்ள துப்புரவுப்பணியாளர் பணியிடத்திற்கு பணிமாறுதலில் எ அனுமதி வேண்டி 18.01.2017–ஆம் நாளிட்ட விண்ணப்பத்தில் கோரியுள்ளார்.

ஈரோடு மாநகராட்சியில் 178 துப்புரவுப்பணியாளர் பணியிடங்கள் காலியாக உள்ளதா பொது சுகாதாரப்பிரிவு பணியின் அவசியம் கருதி திருமதி கங்காதேவி க/பெ. ராமதா துப்புரவுப்பணியாளர் என்பவரை தஞ்சாவூர் மாநகராட்சியிலிருந்து ஈரோடு மாநகராட்சிக் பணிமாறுதலில் வர தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு–</u>

அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். சி1/325/201

19)

4. ஈரோடு மாநகராட்சி மண்டலம்–4 வார்டு எண். 57 காவேரி ரோடு மாநகராட் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 950 மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர். மேலும் வரு கல்வியாண்டில் அரசு உத்தரவின்படி ஆங்கிலவழி கல்வி வகுப்பு ஆரம்பிக்கப்பட உள்ளபடியா அதற்கான கூடுதல் வகுப்பறைகள் தேவைப்படுகின்றன. இப்பள்ளியில் வகுப்பறைக பற்றாக்குறை உள்ள காரணத்தினால் மாணவிகள் தற்பொழுது கூட்ட அரங்கத்தை பயன்படுத் வருகிறார்கள். இந்நிலையில், பள்ளி வளாகத்தில் ஏற்கனவே உள்ள கிழக்கு பார்த் பழுதடைந்த தரைதள கட்டிடத்தில் ஆசிரியர்கள் அறை, கணினி அறை மற்றும் வகுப்பறையா பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் மாணவிகளுக்கு ஆபத்து ஏற்படும் சூழ்நிலையி உள்ளது. எனவே பழுதடைந்த நிலையில் உள்ள இப்பழைய கட்டிடத்தினை இடித் அப்புறப்படுத்திவிட்டு புதியதாக மூன்று வகுப்பறைகள் கொண்ட தரைதள கட்டிடம் கட் அனுமதியும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.50.00 இலட்சத்திற் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு–</u>

1. அனுமதி வழங்கலாம்.
2. இப்பணியினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். இ1/85/201

20)

5. இம்மாநகராட்சி மண்டலம்–2 பெரியசேமூர் (பழைய நகராட்சி) எல்லைக்குட்பட்ட சாலை ஓரங்களில் நடைபெறும் சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிம இனத்திற்கு திரு.செல்வ என்பவருக்கு 01.04.2015 முதல் 31.03.2018 வரை இம்மாமன்ற தீர்மானம் எண்.26 நாள்.30.03.2015ல் அனுமதிக்கப்பட்டது. இவ்வினத்தின் உரிமகாலம் 31.03.2017 உடன் முடிவடைகிறது.

மேற்கண்ட சாலை ஓரக்கடை அமைந்துள்ள பகுதியில் அடிக்கடி விபத்துக்க ஏற்படுவதாலும், மேலும் பொதுமக்கள் செல்வதற்கு இடையூறாக உள்ளமையாலும் மேற்படி உரி இனத்தை 01.04.2017 முதல் ரத்து செய்யவும், பொது ஏல இனங்களின் அட்டவணையிலிருந் நீக்கம் செய்யவும் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு–</u>

1. அனுமதி வழங்கலாம்.

**ERODE CITY MUNICIPAL CORPORATION** Dated 31.1.2017 9

21)

6. ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3க்குட்பட்ட வில்லரசம்பட்டி "ஆ" கிராமம் ரீ.ச.எண்.105/1-ல் 0.31.22 ஹெக்டேர் / 0.85 ஏக்கர் நிலத்தில் 110/22கி.லோ.துணை மின் நிலையம் அமைத்திட தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாலும், அத்துணை மின் நிலையம் அமைப்பதற்கு ஏதுவாக வில்லரசம்பட்டி "ஆ" கிராமம் ரீ.ச.எண்.105/1-ல் 0.31.22 ஹெக்டேர் / 0.85 ஏக்கர் நிலத்தில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு மாநகராட்சியின் ஒத்திசைவினை தமிழ்நாடு மின்வாரியத்தால் கோரப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் துணை மின் நிலையம் அமைத்துக் கொள்ள, நில உரிமை மாற்றம் செய்வதற்கு ஈரோடு மாநகராட்சிக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தமிழ்நாடு மின் வாரியத்திற்கு தெரிவிக்க அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

மாநகராட்சியின் ஆட்சேபணையின்மையைத் தெரிவிக்கலாம்.

கோப்பு எண். இ2/450/2017

21)

22)

7. ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கீழ்க்கண்டுள்ள குத்தகை இனங்களை 01.04.2017 முதல் 31.03.2020 முடிய மூன்றாண்டு காலத்திற்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு, பொது ஏலம் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் அடங்கிய பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிக்கை மற்றும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வைப்புத் தொகை ஆணையர் மற்றும் தனி அலுவலரின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஏல இனம் | ஏலம்/ ஒப்பந்தப் புள்ளிக்கு செலுத்த வேண்டிய வைப்புத் தொகை | தேசிய மயமாக்கப்பட்ட வங்கி உத்திரவாத சான்று அல்லது வங்கி வரைவோலை டிமாண்ட் டிராப்ட் தொகை | ஏலம்/ ஒப்பந்தப் புள்ளி கேள்வி உறுதி செய்த பின் செலுத்த வேண்டிய தொகை |
|---|---|---|---|---|
| 1. | பூந்துறை ரோடு கட்டணக் கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (கால்நடை மருத்துவமனை எதிரில்) (ஆண்கள் மற்றும் பெண்கள்) | ரூ.50,000- | ரூ.50,000- | உரிமத் தொகை முழுவதும் |
| 2. | குரங்குக்குட்டை கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (ஆண்கள் மற்றும் பெண்கள்) | ரூ.50,000- | ரூ.50,000- | உரிமத் தொகை முழுவதும் |
| 3. | கருங்கல்பாளையம் தங்கபெருமாள் பூங்கா வளாகத்தில் உள்ள கட்டணக் கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (ஆண்கள் மற்றும் பெண்கள்) | ரூ.50,000- | ரூ.50,000- | உரிமத் தொகை முழுவதும் |
| 4. | மூலப்பட்டறை சந்திப்பில் உள்ள கட்டணக் கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (ஆண்கள் மற்றும் பெண்கள்) | ரூ.50,000- | ரூ.50,000- | உரிமத் தொகை முழுவதும் |
| 5. | வ.உ.சி. பூங்கா வளாகத்தில் ஏ.பி.டி. ரோட்டைப் பார்த்தாற் போல் கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (ஆண்கள் மற்றும் பெண்கள்) | ரூ.50,000- | ரூ.50,000- | உரிமத் தொகை முழுவதும் |

# ERODE CITY MUNICIPAL CORPORATION



மேற்கண்ட குத்தகை இனங்களுக்கு 2017-2020-ஆம் ஆண்டிற்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுக்கு அனுமதி வேண்டப்படுகிறது.

மேற்காணும் குத்தகை இனங்களை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கும், தினசரி நாளிதழில் விளம்பரம் வெளியிடுவதற்கு மற்றும் அதற்காகும் செலவினத்திற்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். அ1/160/2016

22)

31.1.2017